# தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.01 / 2018–19 நாள்: 21.05.2018**

**இரு உறைகள் முறை - மொத்த ஒப்பந்த வகை**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் கீழ்க்காணும் விவரப்படி பணியின் எதிரில் குறிப்பிடப்பட்ட நாளில் மாலை 3.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்புடைய செயற்பொறியாளரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் தாட்கோ தலைமை அலுவலகத்திலுள்ள ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் முற்பகல் 11.00 மணியளவில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் (அல்லது) அவர்களது முகவர்களின் முன்னிலையில் திறக்கப்படும். அரசாணை எண் 81/ ஆதிமபகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவைகளில் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டிடப் பணியில் அனுபவமுள்ள முதல் அழைப்பாக இருந்தால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்தக்காரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்துக் கொள்ளலாம். தாட்கோவில் முதல் வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்துக் கொள்ளலாம். தாட்கோவில் ஒப்பந்த பதிவு பெறாதவர்கள் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்வதற்கு முன் நடப்பாண்டு நிலையில், தாட்கோவில் முதல் வகுப்பில் ஒப்பந்தக்காரராக தொடர்புடைய கோட்டத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர், அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் உரிய சான்றிதழ்களுடன் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான தொகையினைச்செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

"Tender form can be downloaded free of cost from www.tenders.tn.gov.in"

| வ. எண் | மாவட்டம் | இடம் | வேலை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் | முன் வைப்பு தொகை ரூபாய் | ஒப்பந்தக்காரர் பதிவு விவரம் | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் GST |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருச்சி | 200 மாணவர்கள் தங்கும் புதிய பழங்குடியினர் நல மாணவர் விடுதிக் கட்டடம் (செங்காட்டுப்பட்டி) | 15 மாதங்கள் | 146000 | முதல் வகுப்பு | 15000+1800 |
| 2 | நீலகிரி | மு. பாலாடாவில் ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப்பள்ளி கட்டடம் பகுதி I(ஆசிரியர் குடியிருப்பு I, உயர்நிலைபள்ளி ஆய்வகம் மற்றும் மாணவர் விடுதி) | 15 மாதங்கள் | 133000 | முதல் வகுப்பு | 15000+1800 |
| 3 | நீலகிரி | மு. பாலாடாவில் ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப்பள்ளி கட்டடம் பகுதி II (ஆசிரியர் குடியிருப்பு II, மேல்நிலைபள்ளி ஆய்வகம் மற்றும் மாணவியர் விடுதி) | 15 மாதங்கள் | 144000 | முதல் வகுப்பு | 15000+1800 |
| 4 | நீலகிரி | மு. பாலாடாவில் ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப்பள்ளி கட்டடம் பகுதி III (ஆசிரியர் குடியிருப்பு III, 14 வகுப்பறை கட்டடம் | 15 மாதங்கள் | 144000 | முதல் வகுப்பு | 15000+1800 |

| **முன்வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய விபரம்** | | |
|---|---|---|
| வ. எண்: 01 | செயற்பொறியாளர், தாட்கோ, திருச்சி | 1 |
| வ. எண்: 02 முதல் 04 வரை | செயற்பொறியாளர், தாட்கோ, கோயம்புத்தூர் | 3 |
| **மொத்தம்** | | 4 |

ஒப்பந்தப்புள்ளிபடிவம் கிடைக்குமிடங்கள்: **செயற்பொறியாளர், தாட்கோ, திருச்சி , கோயம்புத்தூர் கோட்ட அலுவலகம்**

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளிபடிவத்தின் விற்பனைக் காலம் : (இணையதளம் , திருச்சி மற்றும் கோயம்புத்தூர் கோட்ட அலுவலகம்) | 22.5.18 முதல் 27.06.18 வரை | மாலை 5.45 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: ( திருச்சி மற்றும் கோயம்புத்தூர் கோட்ட அலுவலகம்) | 28.06.18 | மாலை 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழுவினரால் திறக்கப்படும் நாள் (தாட்கோ, தலைமை அலுவலகம்) | 29.06.18 | முற்பகல் 11.00 மணியளவில் |

பொது மேலாளர் (தொ.நு.)

## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
## தேனாம்பேட்டை, சென்னை – 18.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 01/ 2018 – 19 / நாள். 21.05.2018

மொத்த ஒப்பந்த முறை – இரு உறைகள் முறை

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் இணைப்பில் உள்ளவாறு பணியின் எதிரில், குறிப்பிட்ட நாளில் ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தப்பட்ட தாட்கோ, கோட்ட செயற்பொறியாளர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

இரு உறைகள் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. உறை 1–ல் விண்ணப்பத்தாரர்கள் தகுதிகாண் விபரங்கள் மற்றும் முன் வைப்புத் தொகையை வைத்து மூடி முத்திரையிட்டு, **உறையின் மீது தகுதிகாண் விபரம் மற்றும் முன்வைப்பு தொகை என குறிப்பிட்டும்,** உறை 2–ல் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தை வைத்து மூடி முத்திரையிட்டு **உறையின் மீது விலைப்புள்ளி ஒப்பந்தப்படிவம் என குறிப்பிட்டும்** இவ்விரு உறைகளையும் ஒரு பெரிய உறையில் வைத்து மூடி முத்திரையிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்படாமல் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

2. மேலே குறிப்பிட்டபடி மூடி முத்திரையிடப்பட்ட இரு உறைகள் அடங்கிய பெரிய உறை 28.06.2018 அன்று பிற்பகல் 3.00 மணி (அலுவலக நேரங்காட்டியின்படி) வரை மட்டும், தொடர்புடைய கோட்ட செயற்பொறியாளர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். பூர்த்தி செய்யப்பட்ட உறை –1 தகுதிகாண் படிவம் என குறிப்பிடப்பட்ட உறை மட்டுமே 29.06.2018 அன்று முற்பகல் 11.00 மணி (அலுவலக நேரங்காட்டியின்படி) அளவில் ஒப்பந்த குழுமத்தினரால், ஒப்பந்தப்புள்ளி படிவம் அளித்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

3. அவ்வாறு திறக்கப்பட்ட உறை 1–ல் உள்ள பூர்த்தி செய்யப்பட்ட தகுதிகாண் படிவம் மற்றும் முன் வைப்புத் தொகை ஆகியன வெற்றி அல்லது தோல்வி எனும் அடிப்படையில் தேர்வு செய்யப்படும், பங்கேற்ற ஒப்பந்தக்காரர்களின் தகுதி மற்றும் முன் வைப்புத் தொகை ஆகியன, தகுதிகாண் படிவத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு தகுந்த முன் அறிவிப்பு செய்யப்பட்டு அவர்கள் முன்னிலையில் பூர்த்தி செய்யப்பட்ட உறை – 2 அதாவது விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மட்டுமே பின்னர் அறிவிக்கப்படும் தேதி மற்றும் நேரத்தில் ஒப்பந்தக் குழுமத்தினரால் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும். திறக்கப்படும், தகுதி பெறப்படாத ஒப்பந்தக்காரர்களின் உறை–2 விலைப்புள்ளி முறை ஒப்பந்தப்புள்ளிகள், பிரிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

4. பெறப்பட்ட இரு உறை ஒப்பந்தப்புள்ளிகளை எக்காரணமும் தெரிவிக்காமல் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 18 அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

5. <u>தகுதி பெறத் தேவையான அடிப்படை வரையறைகள் :</u>

அ) விண்ணப்பதாரர் / நிறுவனம் அதே பெயரில் குறைந்த பட்சம் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து கட்டுமானப் பணிகளை நல்ல முறையில் நிறைவேற்றி வருபவராக இருத்தல் வேண்டும்.

ஆ) விண்ணப்பதாரர் / நிறுவனம் புதிய விதிமுறைகளின் கீழ் முதல் வகுப்பில் ரூ.75.00 இலட்சங்களுக்கு மேல் பண வரம்புடன் முதல் வகுப்பில் ஒப்பந்தக்காரராக பதிவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.

இ) (i) விண்ணப்பத்தாரர் / நிறுவனம் ரூ. 30.00 இலட்சங்களுக்கு குறைவில்லாத மதிப்புள்ள அசையா சொத்துக்களுக்கு உரிமையாளர் என்பதற்கு சான்றாக சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை வட்டாட்சியரால் மூன்று வருடங்களுக்குள் பெறப்பட்டதாக இருக்க வேண்டும். சொத்தின் மீது வில்லங்கம் ஏதுமில்லை என்பதற்கான சான்றிதழை, சொத்து மதிப்பு சான்றிதழ் பெறப்பட்ட நாளிலிருந்து 15.06.2018 வரை பெற்று தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும்.

ஈ) (i) இலக்கம் 1–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள விண்ணப்பத்தாரர் / நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் ரூ. 136.00 இலட்சத்திற்கு மேல் நிதி பரிவர்த்தனை (Annual Minimum Financial turn over) மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஈ) (ii) இலக்கம் 2–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள விண்ணப்பத்தாரர் / நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் ரூ.123.00 இலட்சத்திற்கு மேல் நிதி பரிவர்த்தனை (Annual Minimum Financial turn over) மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஈ) (iii) இலக்கம் 3–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள விண்ணப்பத்தாரர் / நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் ரூ.134.00 இலட்சத்திற்கு மேல் நிதி பரிவர்த்தனை (Annual Minimum Financial turn over) மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஈ) (iv) இலக்கம் 4–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள விண்ணப்பத்தாரர் / நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் ரூ.134.00 இலட்சத்திற்கு மேல் நிதி பரிவர்த்தனை (Annual Minimum Financial turn over) மேற்கொண்டிருக்க வேண்டும்.

உ) (i) இலக்கம் 1–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள விண்ணப்பத்தாரர் / நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் ரூ. 136.00 இலட்சங்கள் (பணியின் மதிப்பு + GST வரி உட்பட) ஒத்த தன்மையிலான கட்டடப் பணியினை அரசு அல்லது அரசு சார் நிறுவனங்கள் தனிவொரு உடன்படிக்கையின்

கீழ் நல்ல முறையில் செய்து முடித்திருக்க வேண்டும். சம்ந்தப்பட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து இது சம்பந்தமாக பெறப்பட்ட சான்றிதழை இணைத்திருக்க வேண்டும்.

உ) (ii) இலக்கம் 2–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள விண்ணப்பத்தாரர் / நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் ரூ. 123.00 இலட்சங்கள் (பணியின் மதிப்பு + GST வரி உட்பட) ஒத்த தன்மையிலான கட்டடப் பணியினை அரசு அல்லது அரசு சார் நிறுவனங்கள் தனிவொரு உடன்படிக்கையின் கீழ் நல்ல முறையில் செய்து முடித்திருக்க வேண்டும். சம்ந்தப்பட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து இது சம்பந்தமாக பெறப்பட்ட சான்றிதழை இணைத்திருக்க வேண்டும்.

உ) (iii) இலக்கம் 3–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள விண்ணப்பத்தாரர் / நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் ரூ.134.00 இலட்சங்கள் (பணியின் மதிப்பு + GST வரி உட்பட) ஒத்த தன்மையிலான கட்டடப் பணியினை அரசு அல்லது அரசு சார் நிறுவனங்கள் தனிவொரு உடன்படிக்கையின் கீழ் நல்ல முறையில் செய்து முடித்திருக்க வேண்டும். சம்ந்தப்பட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து இது சம்பந்தமாக பெறப்பட்ட சான்றிதழை இணைத்திருக்க வேண்டும்.

உ) (iv) இலக்கம் 4–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள விண்ணப்பத்தாரர் / நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் ரூ.134.00 இலட்சங்கள் (பணியின்மொத்த மதிப்பு வரி உட்பட) ஒத்த தன்மையிலான கட்டடப் பணியினை அரசு அல்லது அரசு சார் நிறுவனங்கள் தனிவொரு உடன்படிக்கையின் கீழ் நல்ல முறையில் செய்து முடித்திருக்க வேண்டும். சம்ந்தப்பட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து இது சம்பந்தமாக பெறப்பட்ட சான்றிதழை இணைத்திருக்க வேண்டும்.

ஊ) (i) இலக்கம் 1–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள கடந்த மூன்று ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் வருடாந்திர கூட்டு நிதி பரிவர்த்தனை (Cumulative Financial Turn over) (பணியின்மொத்த மதிப்பு வரி உட்பட) ரூ. 408.00 இலட்சம், குறையாமல் அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களின் கட்டுமான பணிகள் செய்தவராக விண்ணப்பதாரர் / நிறுவனம் இருத்தல் வேண்டும். இது சம்மந்தமான சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

ஊ) (ii) இலக்கம் 2–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள கடந்த மூன்று ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் வருடாந்திர கூட்டு நிதி பரிவர்த்தனை (Cumulative Financial Turn over) (பணியின்மொத்த மதிப்பு வரி உட்பட) ரூ. 369.00 இலட்சம், குறையாமல் அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களின் கட்டுமான பணிகள் செய்தவராக விண்ணப்பதாரர் / நிறுவனம் இருத்தல் வேண்டும். இது சம்மந்தமான சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

ஊ) (iii) இலக்கம் 3–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள கடந்த மூன்று ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் வருடாந்திர கூட்டு நிதி பரிவர்த்தனை (Cumulative Financial Turn over) (பணியின்மொத்த மதிப்பு வரி உட்பட)

ரூ. 402.00 இலட்சம், குறையாமல் அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களின் கட்டுமான பணிகள் செய்தவராக விண்ணப்பதாரர் / நிறுவனம் இருத்தல் வேண்டும். இது சம்மந்தமான சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

ஊ) (iv) இலக்கம் 4–ல் உள்ள பணியில் கலந்து கொள்ள கடந்த மூன்று ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் வருடாந்திர கூட்டு நிதி பரிவர்த்தனை (Cumulative Financial Turn over) (பணியின்மொத்த மதிப்பு வரி உட்பட) ரூ. 402.00 இலட்சம், குறையாமல் அரசு அல்லது அரசு சார் நிறுவனங்களின் கட்டுமான பணிகள் செய்தவராக விண்ணப்பதாரர் / நிறுவனம் இருத்தல் வேண்டும். இது சம்மந்தமான சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

எ) தகுதிகாண் படிவம் மற்றும் விலை விகித ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி அனுப்பும் கடிதத்துடன் ஒப்பந்தக்காரராகப் பதிவு பெற்றமைக்கான சான்று ஒத்த தன்மையிலான பணிகளில் பெற்ற முன் அனுபவத்திற்கான சான்றுகள், வருமான வரி கணக்கு செலுத்தியமைக்கான அத்தாட்சி, GST பதிவு சான்றிதழ், நடப்பு காலத்திற்கான வரி நிலுவையில்லை / சரிபார்க்கப்பட்டமைக்கான சான்று ஆகியன தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.

ஏ) தாட்கோவில் ஒப்பந்தப் பதிவு பெறாதவர்கள் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொள்வதற்கு முன்பு தாட்கோவில் தகுந்த வகுப்பில் பணி தொடர்புடைய கோட்டத்தில் 2018–19 நிலையில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஐ) மேற்படி பணிகளுக்கு தாட்கோவில் எந்தவொரு கோட்டத்திலும் பதிவு செய்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்தக்காரர்கள் இரட்டை உறை ஒப்பந்த பள்ளியில் கலந்து கொள்ள தகுதிகாண் சான்று உள்ளவர் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

மேற்கண்ட அத்தாட்சி ஆவணங்கள் இணைக்காமல் பெறப்படும் கோரிக்கைகளின் மீது தகுதிகாண் படிவம் மற்றும் மொத்த ஒப்பந்த விழுக்காடு முறை ஒப்பந்தப்புள்ளி வழங்கப்படமாட்டாது.

6. அரசாணை எண் 81/ ஆதிமபகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவைகளில் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி (முதல் வகுப்பில் ரூ.75.00 இலட்சம் மதிப்பிற்கு மேல் உள்ள பணிகள் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள்) பதிவு செய்துள்ள கட்டிடப் பணியில் அனுபவமுள்ள, முதல் அழைப்பாக இருந்தால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்தக்காரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். மற்ற அழைப்புகளுக்கு அனைத்து ஒப்பந்தக்காரர்களும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் ஒப்பந்தப் பதிவு பெறாதவர்கள் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொள்வதற்கு முன்பு தாட்கோவில் தகுந்த வகுப்பில் 2018–19, தொடர்புடைய கோட்டத்தில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்துக் கொள்ள வேண்டும்.

7. (i) ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் இலக்கம் (1)–ல் உள்ள பணிக்கு திருச்சி கோட்ட செயற்பொறியாளரிடமிருந்து பணியின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் அலுவலக நேரத்தில் கிடைக்கும். குறிப்பிட்டுள்ள தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒப்பந்தக்காரர் பொறுப்பாகும். குறிப்பிட்டுள்ள தேதிக்குப்பின் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி வரும் விண்ணப்பம் திருச்சி செயற்பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

   (ii) ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் இலக்கம் (2,3 &4)–ல் உள்ள பணிகளுக்கு கோயம்புத்தூர் கோட்ட செயற்பொறியாளரிடமிருந்து பணியின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் அலுவலக நேரத்தில் கிடைக்கும். குறிப்பிட்டுள்ள தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒப்பந்தக்காரர் பொறுப்பாகும். குறிப்பிட்டுள்ள தேதிக்குப்பின் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி வரும் விண்ணப்பம் கோயம்புத்தூர் செயற்பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தபாலில் அனுப்பப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற நிர்ணயிக்கப்பட்ட விற்பனைக்கும் மற்றும் பெற்றுக் கொள்ள கடைசி நாள் ஏதாவது ஒரு காரணத்தால் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி அதற்கு அடுத்த பணி நாளில் விற்பனை செய்து மறுநாள் மாலை 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். பூர்த்தி செய்யப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை சம்மந்தப்பட செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பதிவு அஞ்சல் மூலமாகவும் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

9. பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். காலதாமதத்திற்கு தாட்கோ பொறுப்பேற்காது. குறிப்பிட்ட கால வரையறைக்குள் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கப்படாமல் முகவருக்கே திருப்பி அனுப்பப்படும்.

10. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ஒவ்வொரு பணிக்கும் ரூபாய்) இணைப்பில் உள்ளவாறு ரொக்கமாக, ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பத்துடன் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். இக்கட்டணம் எந்த காரணத்திற்காகவும் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது.

11. டேவணித் தொகை ரூபாய் இணைப்பில் உள்ளபடி அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்டு, தொடர்புடைய செயற்பொறியாளர் மாற்றத் தக்க வகையில் கேட்பு வரைவோலை அல்லது தேசிய சேமிப்புப் பத்திரமாகவோ, அல்லது டெபாசிட்டாகவோ இருத்தல் வேண்டும். டெபாசிட்டாக இருப்பின் (Revenue stamps) முத்திரை வில்லையில் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும் இத்தொகை தொடப்புடைய செயற் பொறியாளர் அவர்கள் எடுக்கத் தக்க வகையில் செலுத்தவேண்டும். டேவணித் தொகை குறைவாக செலுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். டேவணித் தொகை ரொக்கமாக செலுத்துதல் ஏற்கப்படமாட்டாது. வங்கி கேரண்டி எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. டேவணித் தொகை இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படுவதுடன், ஒப்பந்தக்காரரின் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரும்போது முந்தைய செயல்முறை, செய்து முடித்திருக்கும் வேலையின் தன்மை மற்றும் மதிப்புத் தொகை, ஒப்பந்தக்காரர் பதிவு சான்றிதழ் மற்றும் நடப்பாண்டு பதிவு புதுப்பித்ததற்கான சான்று, மின்பணி செய்வதற்கான 'பி' அல்லது 'சி' உரிமம் பெற்ற நபரின் சான்றிதழ் மற்றும் விற்பனை வரி நிலுவையில்லா சான்று ஆகியவற்றை விண்ணப்பத்துடன் தொடர்புடைய செயற் பொறியாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும், அல்லது ஒப்பந்தபுள்ளி இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் (Down loaded from internet)செய்து சமர்ப்பிக்கும்போது மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் இணைத்து அனுப்பப்பட வேண்டும். மேற்படி சான்றிதழ்களை சரி பார்த்த பிறகே ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சம்மந்தப்பட்ட செயற் பொறியாளர் அவர்களால் வழங்கப்படும். அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பம் பெறப்படாத பதிவுகளுடன் வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

13. மேலும், இவ்வொப்பந்தப்புள்ளி அழைப்பில் கோரப்படும் பணிகளை ஒப்பந்தக்காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

14. ஒப்பந்தக்காரர் செய்யும் பணியின் மதிப்பீட்டுத் தொகைக்கு தக்கவாறு தொழில் நுட்ப அலுவலர்களை நியமனம் செய்து அவர்களின் பெயர் கல்வி தகுதியுடன் சான்றிதழ்கள் மற்றும் பணியை மேற்பார்வையிட ஒப்புதல் கடிதம் ஆகியவற்றுடன் மேற்கண்ட விபரங்களை ஒப்பந்தப்படிவத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

15. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை முழுமையாக படித்து பூர்த்தி செய்து, ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட வேண்டும், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

16. ஒப்பந்தப்புள்ளியுடன் இது வரை செய்த பணிகளின் விவரங்கள் பணி தொடங்கிய நாள் பணி முடிவடைந்த நாள் ஆகியவற்றினை பட்டியலிட்டும் மேலும் தற்போது ஏதேனும் பணி செய்யப்படுமாயின் அப்பணியின் பெயர், பணி தொடங்கிய நாள், பணி முடிவடைய வேண்டிய நாள், தற்போதைய நிலை ஆகியன பட்டியலிட்டு இணைக்கப்பட வேண்டும்.

17. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு முன் கட்டுமானத்திற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்கள் கிடைக்குமிடம் மற்றும் தேவையான அளவு இவற்றினை உறுதி செய்து கொண்டு ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.

18. ஏற்கனவே பணி ஒப்பந்தம் இரத்து செய்தவர்கள், ஒப்பந்தப்புள்ளி நிலையில் இரத்து செய்தவர்களது ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் ஏற்றுக் கொள்ளப்படாது.

19. ஒப்பந்தப்புள்ளி தேதி நிலையில் ஒப்பந்தக்காரர் பதிவு நிலையில் இல்லாதது, பணித்திறன் குறைவாக அல்லது திருப்திகரமாக இல்லாதோர், செயற்பொறியாளர் மந்தன அறிக்கையின்படி பணித்திறன், நிதித்திறன் குறைவானவரது ஒப்பந்தப்புள்ளிகளும் பரிசீலிக்கப்படாது.

**20. சிறப்புப்பணியாக இரட்டை உறை ஒப்பந்த புள்ளியாக இருப்பதால் தாட்கோவில் மாநிலத்தில் எந்த கோட்டத்தில் பதிவு செய்திருந்தாலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஒப்பந்தக்காரர்கள் மட்டும் இரட்டை உறை ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின் படி தகுதி உள்ளவராயிருப்பின் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.**

இணைப்பு: வேலையின் விவர அட்டவணை.

பொது மேலாளர்(தொ.நு)

பெறுநர்

தாட்கோ ஒப்பந்தக்காரர்கள் (பட்டியல்படி.)
(சம்மந்தப்பட்ட கோட்டம் மூலமாக)

நகல்:

1. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
2. தலைவர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக.
3. அரசு முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9 அவர்களுக்கு தகவலுக்காக.
4. இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக.
5. இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக.
6. மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
7. பொது மேலாளர் (நிர்வாகம்) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
8. பொதுமேலாளர் (வளர்ச்சி) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
9. நிதிஆலோசகர் (ம) தலைமை கணக்கு அலுவலர், தாட்கோ அவர்களுக்கு தகவலுக்காக.
10. நிறுவனச் செயலர், தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
11. அனைத்துக் கோட்ட செயற் பொறியாளர்கள்.
12. நகல். அறிவிப்புப் பலகைக்கு.